முரசொலி

ஆசிரியர்: மு. கருணாநிதி

— வார இதழ் —

முரசு 5 | 27-6-58 | வெள்ளி | ஒலி 11

REGD No. M 5044
தினத் தந்தி
DAILY THANTHI

PHONE NO: 86977
விடுதலை
VIDUTHALAI
ESTD: 1935
திராவிடர் தமிழ்த் தினசரி

திரித்துக் கூறாதீர்!

திராவிட முன்னேற்றக் கழகத்தார், ஆங்கிலமே பொது மொழியாகவும் ஆட்சி மொழியாகவும் இருக்க வேண்டுமென்று கூறுவதாக, "தினத்தந்தி" ஏடு அடிக்கடி உண்மைக்கு மாறான செய்திகளைத் தந்து வருகிறது. தமிழர், தெலுங்கர், மலையாளிகள், கன்னட மொழியினர் நாலவரும் சேர்ந்து ஆங்கிலத்துக்கு அடி பணிவது போலவும் கேலிச் சித்திரம் தீட்டிக் களிக்கிறது.

தமிழை ஆட்சி மொழியாகக் கொண்ட தமிழகமும், மலையாளத்தை ஆட்சி மொழியாகக் கொண்ட கேரளமும், தெலுங்கை ஆட்சி மொழியாகக் கொண்ட ஆந்திரமும், கன்னடத்தை ஆட்சி மொழியாகக் கொண்ட கருநாடகமும், வடவர் ஆதிக்கத்திலிருந்து விடுதலைபெற்று—திராவிடக் கூட்டாட்சி யொன்றினை நிறுவி—அந்தக் கூட்டாட்சியில் தொடர்பு மொழியாகவும், பிற நாடுகளுடன் தொடர்பு கொள்ளும் மொழியாகவும் மட்டும் ஆங்கிலத்தைப் பயன்படுத்துவது என்பதே தி. மு. கழகம் கூறிவரும் கருத்தாகும்!

'தினத்தந்தி' யெனத் தமிழிலே பெயர் பொறித்து—அதன் கீழே ஆங்கிலத்திலும் பெயர் பொறித்திருப்பது, ஆங்கிலத்துக்குத் தரப்பட்டுள்ள "தொடர்பு மொழி அந்தஸ்து" தான்!

இதையேதான் தி. மு. க. கூறுகிறதே தவிர, திராவிட மொழிகளுக்குரிய ஆட்சி மொழி அந்தஸ்தை கழகம் விரும்பவில்லை யென்று தினத்தந்தி கூறுவது, உண்மைக்குப் புறம்பான கூற்றேயாகும்.

தலையங்கம் முழுதும்—"நாம் தமிழர்"!

பக்கத்திற்குப் பக்கம் "நாம் தமிழர்"!

கட்சி விளம்பரங்களில் புலி, வில், கயல் பொறித்த சின்னம்! ஆனால் அந்தோ; தினத்தந்தியின் தலைப்பில் வட நாட்டு அரசின் தொடர்பை வலியுறுத்தும் வேறு வகைச் சின்னம்! தினசரி ராசி பலன்—புதுயுக வழிகாட்டி!

இது தினத்தந்தியின் கொள்கை—இந்த விசித்திர ஏடு தி. மு. கழகத்தின் தூய கொள்கைகளுக்குத் திரையிட முனைவதுதான் வேடிக்கையிலும் வேடிக்கை!

திராவிடத்தை எரிக்காதீர்!

"வாழ்க வாழ்கவே வளமார் எமது திராவிடநாடு!...
பண்டைத் தமிழும் தமிழில் மலர்ந்த
பண்ணிகர் தெலுங்கு துளு மலையாளம்
கண்டை நிகர் கன்னட மெனும் மொழிகள்
கமழக் கலைகள் சிறந்த நாடு!..."
—இது திராவிடப் பண்!

"திராவிடநாடு திராவிடருக்கே!"—பெரியார் முழங்கினார்—கழகத்தினர் முழக்கமிட்டனர்!

தமிழகம்—கேரளம் — கர்னடகம் — ஆந்திரம் — இணைவதே திராவிடநாடு!

இதோ, இன்றுவரையில் "விடுதலை" ஏட்டின் முகப்பில் "திராவிடநாடு திராவிடருக்கே" என்ற லட்சியப் பரணி!

நாளைக்கு தமிழ்நாடு, பாகிஸ்தான் தவிர ஏனைய இந்தியா முழுதும் கேரளம், ஆந்திரம், கர்நாடகம் உள்ளிட்ட எல்லாப் பகுதிகளும் நெருப்புக்கு இரையாகப் போகின்றன! ஆமாம்; தேசப் பட எரிப்புப் போராட்டத்தில்!

"சுதந்திரத் தமிழ்நாட்"டின் ஜுவாலை திராவிடத் திருநாடடிலுள்ள கன்னட, மலையாள, தெலுங்கா பகுதிகளிலும் பரவப்போகிறது. அவைகளை சுட்டெரிக்கப் போகிறது. இந்தியத் துணைக் கண்டப் படம்...(இல்லை — இல்லை — இந்திய தேசப் படம்) எரிக்கபபடும்போது, பெரியாரின் திராவிடநாட்டுக் கொள்கையும் எரிந்துவிடும்! சுதந்திரத் தமிழ்நாடு கொள்கை மட்டுமே மிஞ்சுமாம்! விடுதலை முகப்பு மாற்றப்படும்!

"திராவிடநாட்டுக்குக் கோவிந்தா! தினத்தந்திக்கு ஜே!" என திராவிடக் கழகத் தோழர்கள் புது முழக்கம் கண்டுபிடிக்கக் கூடும்.

போனால் போகிறது — பரவாயில்லை; சுதந்திரத் தமிழ்நாடு என்ற அளவாவது வடவர் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறுவதை பெரியார் இன்னும் ஒத்துக் கொண்டிருக்கிறாரே; அதுவரை மகிழ்ச்சி தான்!

"போ, வெளியே"!

"காங்கிரஸ் இயக்கம் தோன்றிய நாள் தொட்டு அதிலே அசையாத அங்கம் வகிக்கிறேன் நான்!"

"அண்ணல் காந்தியாரின் படத்திற்கு மாலையிட்டு-மண்டியிட்டு—மரியாதை செலுத்தத் தவறாதவன் நான்!"

"தெரியவில்லையா என்னை? பண்டிதரின் பவனியின் போதெல்லாம் பாராட்டுரை வழங்கி — உடனிருந்து ஊர் சுற்றியவனல்லவா நான்!"

— இப்படிப் பலவழிகளில் 'பெருமைக்குரிய' காங்கிரசின் புழ்பாடி — தன் சுயபுராணத்தையும் படித்தாராம் அந்தப் பெரிய மனிதர்!

காங்கிரஸ் பொதுக் காரியதரிசி ஸ்ரீமந் நாராயணனிடம் ஓடினார் — மொரார்ஜி தேசாயிடம் முறையிட்டார்—லால் பகதூர் சாஸ்திரியின் காலில்கூட விழுந்து பார்த்தாராம்!

ஆனால் இவ்வளவுக்குப் பிறகும் கிடைத்த ஒரே பதில் இது தான்:

"போ வெளியே"!

காங்கிரசில் அவருக்கு இடமில்லை — கண்டிப்பான நடவடிக்கை எடுக்கத் துவங்கி விட்ட காங்கிரஸ் மேலிடம் அவரது கழுத்திலே,கைவைத்து விட்டது!

இத்தனைக்கும் அவர் என்ன சாமானிய மனிதரா?

மாகாண அமைச்சர்!

காங்கிரஸ் கோட்டை சலகலக்காத மாகாணங்களில் ஒன்று—என பூரிப்புடன் சொல்லிக் கொண்ட உத்தரப் பிரதேச மந்திரி சபையில் ஓர் அங்கம்!

அவரைத்தான் துரத்துகிறது காங்கிரஸ்!

அவர்மேல் சுமத்தப்பட்டிருக்கும் குற்றங்களை அவர் மறுத்தார்; நீதிமன்றத்திலே வழக்காடும் கைதியைப்போல் வாதிட்டார்; பொய்க் கையெழுத்து என்றார்; பொறாமையின் விளைவு என்றார்! ஆனாலும் பலன் இல்லை! பொதுத் தேர்தலில் மத்திய பிரதேச காங்கிரஸ் கமிட்டித் தலைவரை மறைமுகமாக எதிர்த்து — அவரைத் தோற்கடிக்க சுயேட்சை அபேட்சகருக்கு உதவி புரிந்தார்—என்ற மாபெரும் குற்றத்தை அவர்மேல் சுமத்தியது மேலிடம்!

அவர் வெளியே துரத்தப்படுகிறார்!

நடவடிக்கை நேர்மையானதா-நீதிக்குக் கட்டுப்பட்டதா என்பதல்ல நாம் ஆராய வேண்டிய பிரச்சினை! ஆனால் ஆராயாமல் கிடைத்து விட்ட கண்டு பிடிப்பு ஒன்றை சொல்லத்தான் வேண்டியிருக்கிறது!

புரையோடி விட்ட புண்ணை மறைக்க எத்தனை நாட்கள் புனுகு பூச முடியும்?

மெருகுப் பேச்சால் காங்கிரசின் கருகிப்போன பாகங்களை எத்தனை காலம்தான் மறைத்து வாழ முடியும்?

முடியாது; முடியாது!

புண் முடை நாற்றம் வீசுகிறது—வாடை சகிக்காத மக்கள் வேறு பக்கம் திரும்புகிறார்கள்!

சயநலமும்—பதவி வெறியும் ஆட்டம் போடுகிறது அங்கே!

பொறாமையும் — பக்கத்திலிருந்து குழி பறிக்கும் பண்பும் பார்க்கும் திசையெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கிறது அதிலே!

அதன் விளைவுதான் இப்படிப்பட்ட ஆயிரக் கணக்கான 'போ, வெளியே!'க்கள்!

அதன் தொடர்ச்சியாக மக்களும் விரைவில் தங்கள் நெஞ்சங்களிலிருந்து "போ, வெளியே!" என்று காங்கிரசுக்கு 'விரட்டு விழா' நடத்தப் போவதை நாம் காணத்தான் போகிறோம்!

ரூ. 12,00,000 மோசடி!

உணவுப் பகுதிகளில் விசித்திர நிகழ்ச்சி ஒன்று நடைபெறும்!

'பக்கத்து இலைக்காரனுக்குப் பாயாசம்' என்று பரிமாறுகிறவரை அழைத்து, தன் இலையையும் சேர்த்து சுட்டிக் காக்கும் வேடிக்கை நிகழ்ச்சியைக் காணலாம்!

அதைப் போன்ற நிகழ்ச்சிகள் நமது காருண்யமிக்க காங்கிரஸ் ஆட்சியில் அநேகம் நடைபெறுகின்றன!

ஆனால் இவை வேடிக்கை நிகழ்ச்சிகள் இல்லை; வேதனையையும், விழிகளில் நீரையும் பாய்ச்சுகின்ற சோகச் சம்பவங்கள்!

'ஏழைகளின் நண்பன் நானே' என்று பறைசாற்றிக் கொள்ளும் காங்கிரஸ், அவர்களுக்கு சலுகைகள் தருவதாக அநேக திட்டங்களைச் சொல்லுகிறார்கள்!

அத்தனையும் ஜால வார்த்தைகள்—மயக்கு மொழிகள் என்பதை நாடு உணராமலில்லை!

அப்படிப்பட்ட திட்டம் ஒன்றின் திரை மறைவில் நடைபெற்ற மாபெரும் தீங்கு-பயங்கர மோசடி குறித்த செய்தி ஒன்று வட இந்திய ஏடுகளில் வெளிவந்திருக்கின்றன!

உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்ற திட்டத்திற்கான பல வழிகளில் ஏழை உழவர்களுக்கு குறைந்த விலையில—சில சலுகைகளுடன் உரம் விற்பதும் ஒன்று! இந்தத் திட்டத்தின் கீழ் கோடிக் கணக்கான ரூபாய்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன!

ஆனால் இந்தச் சலுகை சரியான வழியிலே வழங்கப்படுகிறதா?

உள்ளபடியே ஏழை உழவர்களுக்குப் பயன்படுகிறதா?

பனிரெண்டு இலட்சம் ரூபாயை மோசடி செய்துவிட்ட பஞ்சாப மாகாணத்து உயர் தர அதிகாரிகள் சிலரின் போக்கு 'இல்லை; இல்லை' என்றுதான் தெரிவிக்கிறது!

உழவர்களுக்கு மட்டுமே குறைந்த விலையில் உரம் விற்க வேண்டும்—இது திட்டம்!

ஆனால் பஞ்சாப் அதிகாரிகளோ பெரிய மொத்த வியாபாரிகளுக்கே குறைந்த விலையில் உரத்தை விற்றிருக்கிறார்கள்! வியாபாரிகள் அதைப் பெற்று உழவர்களிடம் அதிக விலைக்கு விற்றிருக்கிறார்கள்! இலாபத்தில் இரு பங்கு—ஒன்று முதலாளிகளுக்கு! மற்றது அதிகாரிகளுக்கு!

இதுவரை பனிரெண்டு இலட்சம் ரூபாயுக்கு இப்படிப் பட்ட மோசடி நடந்திருக்கிறது!

நான்கு பெரிய அதிகாரிகள்—

'உழவர்கள்' என்று பொய்க் கையெழுத்திட்ட முப்பது முதலாளிகள்—

காங்கிரஸ் ஆட்சியின் பெருமையை பறைசாற்றிக்கொண்டு வழக்கு மன்றத்திலே நிற்கிறார்கள் இப்போது!

நியாயமாம்!

"ஐயோ! கொஞ்சம் பொறுங்கள்!" என்று அஞ்சி ஓடியவர்கள் அலறி விழுந்தார்கள்!

"ஆண்டவனே! அடுக்காது இது!......அக்ரமம் இது!......" என்று துடியாகத் துடித்துக் கதறியவர்கள் — கடவுளைத் துணைக்கழைத்தவர்கள் — அத்தனைபேரும் கண்கள் கண்ணீர்க் குளமாக — குருதிக் குளத்திலே மிதந்தார்கள்!

'ஓ' வென்று அழுதோர்; ஒரு நொடி பொறுப்பீர்; உயிர் பிழைத்தெழுகிறோம் என்று அலறியோர் — இப்படி எத்தனையோ பேர் குண்டடிபட்டு —குருதி சிந்தி—குற்றுயிராகக் கிடக்கின்றனர்!

யாரைக் குறி வைத்து இரக்கமற்ற தோட்டாக்கள் பாய்ந்திருக்கின்றன? கருத்திலே கொலை வெறி கூத்தாட—கையிலே கம்பும் கத்தியும் ஏந்தி வந்த துரோகிகள் மீதா? நாட்டை கவிழ்க்கும் நாச வேலையிலே ஈடுபட்ட நயவஞ்சகர்கள் மீதா? இல்லை; இல்லை!

நெஞ்சிலே நெருப்பைக் கொட்டும் இந்த 'நரபலி' நடந்ததெங்கே என்று உங்களுக்குத் தெரியாமலிருக்காது — நாடாளும் துரைத்தனத்தாரின் இந்த 'மனித வேட்டை' சென்ற கிழமை சென்னை துறைமுகத் தொழிலாளர்களுக்கிடையே

[தொடர்ச்சி பக்கம்—8]

சென்ற 10—6—58 அன்று, வெங்கிடங்கால் (தஞ்சை மாவட்டம்) தி. மு. கழகப் புதியக் கட்டிடத் திறப்பு விழாவின்போது எடுக்கப்பட்ட படங்கள். கட்டிடத்தைத் திறந்து வைத்த அறிஞர் அண்ணா, சொற்பொழிவாற்றிய ஆசிரியர் மு. க., விழாவின் தலைவர் 'முரசொலி' மாறன், வெங்கிடங்கால் சந்தானம், திருவாரூர் தென்னன்—ஆகியோரையும் காணலாம்.

வெள்ளி 27-6-58 சென்னை

இலங்கைத் தமிழர் உரிமை!

தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அவர்களின் அறிக்கைக் கிணங்க, சென்ற கிழமை இலங்கைத் தமிழர் உரிமை நாள் கொண்டாடி, இலங்கையில் அல்லலுறும் தமிழர்களின் துயர் துடைக்கும் முயற்சிக்குத் தங்களைத் தயார்படுத்திக் கொள்வதோடு, அலட்சியங் காட்டும் டெல்லியையும், அக்கரையற்றிருக்கும் சென்னை சர்க்காரையும் உறக்கத்தினின்றும் எழுப்பும் காரியத்திலும் தமிழர்கள் ஈடுபட்டனர்.

சின்னஞ் சிறிய நாடுதான் இலங்கை! வடக்கு—தெற்காக 270 மைலும், கிழக்கு—மேற்காக 140 மைலும் கொண்டு நமது தமிழகத்து இரண்டு மாவட்டங்களை இணைத்தால் எவ்வளவு பரப்பு இருக்குமோ அவ்வளவு பரப்பு உள்ளது. அந்த நாடு, 65 லட்சம் சிங்களவர்களைத் தன்னகத்தே கொண்டு, 25 லட்சம் தமிழர்களை எல்லா வகையிலும் வேதனைப் படுகுழியில் தள்ளிக் கொண்டிருக்கிறது. மூன்று கோடி தமிழர்கள் அடிமைகளாயிருப்பதால், தமிழகத்தைப் பற்றிப் பயப்படாமல், தென்னவர் உரிமைக்குப் பாதுகாப்பளிக்கும் ஒன்பது கோடி மக்களைக்கொண்ட திராவிடக் கூட்டாட்சி இன்னும் அமையாததால், யாருக்கும அஞ்சத் தேவையில்லை என்ற ஆணவத்தோடு சிங்களவர்கள் அட்டகாசச் செயல்களில் ஈடுபடுகிறார்கள்.

இலங்கைத் தரணியை இப்போது ஆண்டுகொண்டிருப்பவர் பண்டார நாயகா! அவர் சிங்களக் குண்டர்களுக்கு நாயகராகவும், பழந் தமிழர்களைப் பண்டாரமாக்கும் கொடுங்கோலராகவும் இன்ம காட்சி தருகிறார்.

அன்றொரு நாள் இலங்கையிலே தமிழர் கொடி வான் முட்டப் பறந்தது உண்டு. பராந்தக சோழனால் தோற்கடிக்கப்பட்ட ஒரு பாண்டிய மன்னன், தன் சிம்மாசனத்தையும், சுந்தரமுடி எனப்படும் கிரீடத்தையும் தூக்கிக்கொண்டு இலங்கைக்கு ஓடி, அங்குள்ள உதயன எனும் மன்னனிடம் அடைக்கலம் புகுந்தான். ஈழப்படை பராந்தகனைத் தாக்கி, இறுதியில் தோல்வியுடன் திரும்பியது. தான் வெற்றி கொண்ட பாண்டிய நாட்டுப் பொருள்களை சிங்கள வேந்தன் திருப்பித் தரவேண்டுமென்று கேட்டு, அவன் மறுத்ததால் பராந்தகன் ஈழத்தில் படை நடத்தி, ஈழமன்னனை வென்றான். அப்போதும் அந்தக் கிரீடம் முதலிய பொருள்கள் ஒளிக்கப்பட்டன. அதன் பின் சில ஆண்டுகள் கழித்து இராசராச சோழனும், இராசேந்திர சோழனும் ஈழத்தில் தமிழரசை நிறுவி, பாண்டிய நாட்டுப் பொருள்களை மீட்டனர்.

இராசேந்திரன் இலங்கை முழுவதையும் கட்டியாண்டான். இராசராசன் இலங்கையில் தமிழ்த் தலைநகரம் ஒன்றை மத்திய பாகத்தில் அமைத்தான். அந்தத் தலைநகருக்குப் பெயர்தான் "பொலன்னருவா!"

அந்தப் பொலன்னருவா எனும் இடத்தில்தான் இன்று தமிழர்களின் தலைகள் அறுக்கப்படுகின்றன! தமிழ்க் குழவிகளும், குமரிகளும் மந்திகை சிக்கிய மலர் எனக் கசக்கி எறியப்படுகின்றனர்! தமிழனின் செங்குருதி வெள்ளமெனப் பெருக்கெடுத்தோடுகிறது!

பராந்தகன் காலத்திற்கு முற்பட்டே இலங்கையில் வாழ்ந்து வரும் பழந்தமிழர்—பூர்வகுடியினர்—ஏறத்தாழ பதினைந்து லட்சம் பேர்! இலங்கைத் தேயிலைத் தோட்டங்களில் ரத்தக்கண்ணீர் வடித்து, கொட்டும் குளிரிலும், கொடிய காடுகளிலும் உழைத்து, உருக்குலைந்து, அந்நாட்டு வளத்தைப் பெருக்கிடும் தமிழர்கள்—'குடியேறியவர்' என்ற பட்டியலில் பத்து லட்சம் பேர்! இவர்களுக்குக் குடியுரிமை அந்தஸ்து இல்லை. தமிழ் மொழிக்கு சிறப்பு இல்லை. மாறாக, அவமானப்படுத்தப்படுகிறது. "தகுமா? முறையா?" என்று கேட்டால், "தமிழா! தலை பத்திரம்!" என்று மிரட்டுகிறார்கள்; அங்குள்ள சிங்கள வெறியர்கள். அதற்குத் தூபம் போடுவதுபோல் நடந்து கொள்கிறார் பண்டாரநாயகா!

இந்திய சர்க்காரின் பிரதிநிதியாகச் சென்றிருக்கும் குண்டேவா என்பவர் இந்தியர்தான்! ஆனால் வடஇந்தியர்! அதனால் தென்னாட்டார் படும் அவதி, அவரது காதில் நுழையவில்லை!

மற்றொரு செய்தியை மறந்துவிட முடியாது — சென்ற ஆண்டு, இலங்கைத் தொழில் மந்திரி இலங்கை ரத்ன என்பவர் ஒரு விசித்திர உத்தரவைப் பிறப்பித்தார். அதன்படி சிங்களவர்கள் பெரும்பான்மையில்லாத, தமிழர்கள் பெரும்பான்மையுள்ள தோட்டங்களில் வேலை காலியானால்—அந்தக் காலி இடங்களில் பாதி தமிழர்களுக்கும், பாதி சிங்களவர்களுக்கும் வேலை தரப்பட வேண்டும். அதேபோல் தமிழர்கள் பெரும்பான்மையில்லாத, சிங்களவர்கள் பெரும்பான்மையுள்ள தோட்டங்களில் வேலை காலியானால்—அந்தக் காலி இடங்களில் தமிழர்களையே சேர்க்கக்கூடாது; முழுதும் சிங்களவர்களையே போடவேண்டும்! இப்படி ஒரு உத்தரவை யோசனை செய்து, அதை நமது இந்தியப் பிரதிநிதியிடம் காட்டினார் இலங்கை ரத்ன! நமது இந்தியப் பிரதிநிதி இந்த விசித்திர உத்தரவை மறுத்திருப்பார் என்றுதானே எண்ணுகிறீர்கள்? அதுதான் இல்லை! அப்படியே ஏற்றுக் கொண்டார். அவருக்கு என்ன நஷ்டம்? அழுது புலம்புகிறவர்கள் வடநாட்டார் அல்லவே!

"கள்ளத்தனமாகக் குடியேறும் தமிழர்களைக் கண்ட இடத்தில் சுட்டுப் பொசுக்க வேண்டும் என்று லங்கா சுதந்திரக் கட்சி மாநாட்டில் பண்டார நாயகாவின் முன்னிலையில் ஒரு சிங்களப் பிரமுகர் பேசினார் என்றால், எந்த அளவுக்கு அங்கே வெறியுணர்ச்சி தலை தூக்கி இருக்கிறது என்பது புரிகிறதல்லவா?

இங்குள்ள சிலர்—ராஜாராம் நாயுடு போன்றவர்கள் "தமிழ் நாட்டில் கிளப்பி விடுகின்ற தமிழ் உணர்ச்சியினால்தான் இலங்கைத் தமிழர்களும் ஆத்திர வசமாகி சிங்களவர்களுடன் மோதிக் கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டது!" எனப் புதிய காரணம்—பொருந்தாக் காரணம் கண்டுபிடித்துப் பேசுகிறார்கள். கடற்கரைக்கு உலாவப்போன காரிகை, யாரோ காமுகன் அத்துமீறி நடந்து கொண்டான் என்ற செய்தியைக் கணவனிடம் கூறும்போது, அது கேட்டுக் காமுகன்மீது கோபம் கொள்ளவேண்டிய கணவன், அதை விடுத்து மனைவியிடம், "நீ ஏன் அழகாகப் பிறந்து தொலைந்தாய்? அதோடு உனக்கேன் அலங்காரம்? அதனால்தான் அந்தக் காமுகன் அப்படி நடந்தான்—குற்றம் அவன்மேல் இல்லை—உன்மேல்தான்!" எனச் சொல்லி சீறி விழுந்தால் எப்படி இருக்குமோ—அப்படித்தான் இருக்கிறது; ராஜாராம், சின்னத்துரை போன்றவர்களின் கூற்று!

இங்குள்ள மந்திரிகளுக்கு இலங்கை இருக்குமிடம் தெரிகிறது. அங்குள்ள பிரச்சினையும் புரிகிறது. பாகிஸ்தானிலிருந்து வந்த அகதிகளுக்கு 350 கோடி ரூபாய் செலவிட்ட மத்திய சர்க்கார், இலங்கைத் தமிழர்களின் வேதனை கண்டு துடிக்கவில்லையே என்ற நிலைமையும் தெளிவாகப் புரிகிறது. அதே நேரத்தில் இதையெல்லாம் பற்றிப் பேசினால் இருக்கிற பதவிக்கு ஆபத்து வந்து சேரும் என்ற பரிதாபகரமான உண்மையும் புரிகிறது! என்ன செய்வார்கள்; பாபம்!

நேருவோ, தமிழகத்தில் புயல் அடித்தபோது மலைபாளத்து உப்பங்கழிகளில் ஓடத்தில் மிதந்தார்! தமிழர்கள் இலங்கையில் பிணமாகும்போது குலு பள்ளத்தாக்கில் குளிர்ச்சி கண்டுகொண்டிருக்கிறார்! நமக்கு யார் இருக்கிறார்கள்! நம்மையே நாம் திரும்பிப் பார்த்துக் கொள்ளவேண்டியதுதான்! இங்குள்ள தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ராஜாராம் போன்றவர்கள் இலங்கை சர்க்காரின் பாராட்டுதலைப் பெற முனைகிறார்கள். தமிழர்களுக்கு எதிராகப் பேசுகிறார்கள். இலங்கையிலுள்ள விபிஷணன் கோயிலுக்குப் பக்கத்தில் இவருக்கும் ஒரு கோயில் எதிர்காலத்தில் நிச்சயமாகக் கட்டப்படும் என்ற நம்பிக்கை போலும் அவருக்கு!

யவனம், கிரேக்கம், ரோம் நாடுகளுக்கு நாவாய்கள் ஓட்டிச் சென்று—முத்துக்களை உலகமெங்கும் பரப்பித் தமிழ்நாட்டுப் பெருமையை நிலைநிறுத்திய தமிழன், இன்று வெளிநாடுகளில் நாயினும் கீழாய் நடத்தப்படுகிறான்.

குண்டர்களின் கொலை வெறிக்கும், காம வெறிக்கும் ஆளாகக்கூடாது என எண்ணிய ஒரு தமிழ்க் குடும்பம் முன் கூட்டியே தன்னை இறப்புலகத்திற்கு அனுப்பிக்கொண்ட சோகச் செய்தியைக் கேட்டு நெஞ்சு வெடித்துவிடும்போல் திண்டாடுகிறோம். மூன்று பெண்கள்; மூன்று குழந்தைகள்; ஒரு ஆண்—ஆக ஏழு பேரும் கிணற்றிலே விழுந்து பிணமாகி, தங்கள் மானத்தைக் காப்பாற்றிக்கொண்டார்களாம்!

எல்லா வளமும் உள்ள திராவிடத்திலேயிருந்து ஏராளமான திராவிடர் வெளிநாடுகளுக்கு வேலைதேடிச் செல்வானேன்? நாம் அடிமைகளாய் இருப்பதால் அல்லவா, இந்த இழிநிலை? இலங்கை, பர்மா, தென் ஆப்பிரிக்கா தவிர்த்த 28 நாடுகளில் குஜராத்தி பேசுவோர் 2,37,552 பேர்கள் வாழ்கிறார்கள்! பஞ்சாபி மொழிக்காரர்கள் 97,073 பேர் பிழைப்பு தேடிப் போயிருக்கிறார்கள்! சிந்தி மொழி பேசுவோர் 15,166 பேர்தான்! பெங்காலி பேசுகிறவர் 4,073 பேர்தான்!

[தொடர்ச்சி பக்கம்—8]

சென்ற இதழில்...

கரகமாடி கண்ணனுக்கும், தீச்சட்டி சிங்காரத்துக்கும் ஏற்பட்ட போராட்டத்தில், இடையில் குறுக்கிட்ட கற்பூரம், தான் கண்ணனையே திருமணம் செய்து கொள்ளப் போவதாகத் தெரிவிக்கிறாள். அதுகேட்டு அதிர்ச்சியடைந்த சிங்காரத்தைப் பலங்கொண்ட மட்டும் தாக்குகிறான், கண்ணன்......

உள்ளம் தளர — உடல் வீங்க— நடக்க ஆரம்பிக்கிறான், சிங்காரம். நடந்தவை அனைத்தையும் பார்த்துக் கொண்டிருந்த அறவாழி அவனைப் பின் தொடருகிறான்......

மைனா தூக்கிட்டுக் கொண்ட மரத்தடிக்கு வந்ததும் "அய்யோ, மைனா!" என்று அலறி, முகத்தில் அறைந்து கொண்ட சிங்காரம் மரத்தடியில் அமர்கிறான். அறவாழி அவனிடம் போகிறான்...

இருவருக்கும் பேச்சு வளர்கிறது...

கரகமாடி கண்ணன் தன் குடும்பப் பகைவன்; அவனைத் தன் தங்கை திருமணம் செய்து கொள்ள விரும்புகிறாளே—எனக் குமுறுகிறான் சிங்காரம். 'கண்ணனின் தந்தை; அவன் இல்லையேல் கண்ணன்—இருவரில் ஒருவரை கரும்புள்ளி, செம்புள்ளி குத்திக் கழுதையில் ஏற்றி ஊர்வலம் விடவேண்டும்' -- என்று சாகும் தருவாயில் தன் தந்தை தன்னிடம் உறுதி மொழி பெற்றிருப்பதாகவும் தெரிவிக்கிறான்...

இருவரும் பேசிக்கொண்டிருக்கிற நேரத்தில் சுருளிமலையின் புல்லாங்குழல் ஒலி எழும்புகிறது...

* * *

"அதோ கேட்கிறதே புல்லாங்குழல் சப்தம் — காதில் விழுகிறதா? அது யார் தெரியுமா? அவன் தான் இந்த ஊருக்குக் கிருஷ்ணன்—சுருளிமலை யென்று ஒரு சுட்டிப் பயல்!" என்றான் சிங்காரம்.

"பார்த்தேன்—பார்த்தேன்—தெரியும் அந்தப் பையனை!" என்று அறவாழி கூறிக்கொண்டே தன் முகத்தில் ஏற்பட்ட உணர்ச்சியின் சாயலை சிங்காரம் எங்கே பார்த்து விடுவானோ எனப் பயந்து வேறு பக்கம் திரும்பிக் கொண்டான்.

சுருளிமலை யென்றதும் அவனுக்குப் பொன்மணியின் உருவமே விழிகளில் சதிராடத் தொடங்கியது. அவள் வீட்டுக்குச் செல்ல நேரிட்டதும்-அவள் தாய் தந்த அன்பு உபசரணைகளுக்கு ஆளானதும்—அனைத்தையும்விட தேள் கொட்டிய நிகழ்ச்சியில் பெற்ற ஆனந்தமும் — அவன் உள்ளத்தை இனிப்பாக்கிக் கொண்டிருந்தன.

அந்த இன்ப நினைவுகளைக் கலைக்கும் வகையில் சிங்காரம் பேச்சுக் கொடுத்தான்.

"இந்தப் பயலுக்கு ஒரு அக்காள் உண்டு — அழகான பொண்ணு! ரொம்ப நல்ல குணம்! பொன்மணி யென்றால் பொன்மணியேதான்! பெயருக்கேத்த பெண்ணு! அவளை எனக்குக் கல்யாணம் செய்து வைக்கணும்னு என் தங்கச்சிக்கு அபாரமான ஆசை!"

அறவாழியின் முகம் திடீரென மாறிற்று. அந்த மாற்றம் வெளியே தெரியாமல் இருக்க அவன் பெரிதும் கஷ்டப்பட்டான். மிக அலட்சியமாக அந்தச் சேதியைக் கவனிப்பது போல் பாசாங்கு செய்தான்.

"ஏன்; நல்ல பெண் என்றால் தங்கச்சி இஷ்டப்படி கல்யாணம் செய்து கொள்வது தானே?" என்று கேட்டும் வைத்தான். அதைக் கேட்கும் போது அவனுக்கு ஒரே பயம். எங்கே, 'ஆமாம்; அப்படித்தான் நினைத்திருக்கிறேன்' என்று அவன் சொல்லி விட்டால் என்ன செய்வது என்று!

நல்ல வேளையாக சிங்காரம் அப்படி யொன்றும் அதிர்ச்சி தரக்கூடிய பதில் அளிக்கவில்லை. "என்னுடைய இரண்டாவது தங்கச்சியாகப் பொன்மணியை நான் நினைத்திருக்கிறேன்!"

சிங்காரத்தின் இருதயத்து ஆழத்திலே யிருந்து அந்த வார்த்தைகள் பீறிட்டு வெளிக்கிளம்பியதை அறவாழி உணர்ந்துகொண்டான். ஆயினும் தன் உணர்ச்சிகளை அங்கே கொட்டிவிடாமல் தன்னை நிதானப்படுத்திக்கொண்டான்.

"என் தங்கச்சி கற்பூரம் இருக்கிறதே, அது அசல் கற்பூரமேதான்! நெருப்புக் குச்சி பட்டால் பற்றிக் கொள்ளும். 'திடீர், திடீர்' என ஆவேசம் வந்து ஆடும். அதைப் போலவே கோபமும் வந்துவிடும்—ஒருவர்மீது அன்பும் வந்துவிடும்! பாரேன்; ஒரு வேடிக்கையை! அந்தப் பொன்மணி மீது ஒரு கண்ணை வைத்துக்

கொண்டு சுற்றி அலைகிறான் அந்தக் கண்ணன். இந்த விஷயம் புரியாமல் அவன்மீது ஆசை கொண்டு திரிகிறாள் என் தங்கை! அவளாட்ட காதலன் தேடியலையும் பெண்ணை என் மனைவியாக்கப் போகிறாளாம். என் குடும்பத்துப் பரம விரோதியை அவள் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறாளாம்—எப்படியப்பா என் தங்கச்சியின் பைத்தியக்காரத்தனம்!" என சிங்காரம் ஆயாசத்தோடு கேட்டான், அறவாழியைப் பார்த்து.

அறவாழிக்கோ, கண்ணன் தன் காதல் விவகாரத்திலும் பகைவனாக வந்து முளைத்து விடுவான் போலிருக்கிறதே யென்ற பயம் தோன்றியது.

இருப்பினும் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்வதற்காக, "பெண் வீட்டாருக்குக் கண்ணனுக்குக் கொடுக்க சம்மதம் தானே?" என்று ஆவலாக வினவினான்.

"அதெல்லாம் ஒண்ணுமில்லை. அப்படியே அவுங்க சம்மதித்தாலும் நான் அந்தக் கல்யாணம் நடக்க விடமாட்டேன். கண்ணனுக்குப் பெண்ணு கொடுக்கறதைவிட கடலல கட்டி மிதக்க விடலாம்!"

இப்படி ஆவேசமாகப் பேசினான் சிங்காரம். தன்னுயிர்ப் பொருளைக் காப்பாற்றிடும் வேலைக்கு இன்னொரு துணை வலுவில் கிடைத்திருப்பதை யெண்ணி யெண்ணி மகிழ்ந்தான் அறவாழி. அவனுக்கு சிங்காரத்திடம் இன்னும் நெருங்கி உறவு கொள்ள வேண்டும் போலிருந்தது.

"நாமிருவரும் ஒருநாள் பழக்கத்திலேயே எவ்வளவோ பேசி விட்டோம். ஆனால்—உன் மனசிலே உள்ள சுமை எதையும் என்னிடம் இறக்கவில்லை!" என்று வருத்தப்பட்டுக் கொண்டான்.

"கவலைகள் துன்பங்கள் எல்லாம் என்னோடு இருக்கட்டும். நீ வேற அதையெல்லாம் கேட்டு வீணு மனதை அலட்டிக் கொள்ளாதே தம்பீ" — சிங்காரம் கண்களை மூடிக் கொண்டான். அவன் விழிகள் குளமாகியிருப்பதை மறைக்கவே அப்படிச் செய்தான். ஆனால் அவன் நினைத்ததற்கு மாறாக, இமைகள் வழியே நீர்த் துளிகள் முட்டி மோதிக் கொண்டு அவன் கன்னத்தை நனைத்தன.

"பழி தீர்த்துக் கொள்ள சமயம் பார்த்திருக்கிறேன். அந்தப் பாதகன் குடும்பத்திலேயே சம்பந்தம் செய்யத் துடிக்கிறாளே; என் தங்கை! அய்யோ! அப்பா! நான் என்ன செய்வேன்? உங்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை எப்படி நிறைவேற்றுவேன்?" என்று வாய்விட்டு அலறினான் சிங்காரம். முகத்தைக் கைகளால் பொத்திக்கொண்டு மீண்டும் அழத் தொடங்கினான்.

"மகனே! நீ செய்து முடிப்பாய் என்று நம்பித்தான நான் மகிழ்ச்சியோடு சாகிறேன். அந்தக் குடும்பம் பூண்டற்றுப் போய்விட வேண்டும். குழந்தை குட்டிகள் இருக்கிறார்களே என்று கொஞ்சமும் கருணை காட்டாதே! ஊரார் தூற்றுவார்களே யென்று ஒருகணமும் தயங்காதே! சட்டம் தடுக்குமே யென்று அஞ்சாதே! ஊரையும் ஊராளும் சட்டத்தையும் விடப் பெரியது தந்தையின் சொல் என்பதை மறவாதே! நீ செய்யப் போகும் காரியத்தை யார் தடுத்தாலும் கவலைப்படாதே! மகனே! நானே ஒரு சமயம் மீண்டும் உயிர்பெற்று வந்து உன்னைத் தடுத்தால்கூட நீ கேட்கக் கூடாது! கரும்புள்ளி செம்புள்ளி! கழுதை ஊர்வலம்! அந்தக் காட்சியை ஊரார் காணவேண்டும். அதன் விளைவு கொலையாக இருந்தாலும் சரி; எதுவாக இருந்தா சரி; உனக்கு ஆயுள் தண்டனை — தூக்குமேடையே கிடைத்தாலும் சரி; கொஞ்சமும் அஞ்சாதே! உயிருக்குத் துணிந்து என் கட்டளையை நிறைவேற்று! இதோ, உன் தங்கை—இவளுக்கு நீ வாழ்வளித்தால் போதும். உன் வாழ்வைப் பற்றிக் கவலைப் படாதே! இவள் வயிற்றில் தோன்றும் குலக்கொடி நம் குடும்பப் பெருமையை பல தலை முறைகளுக்கு நீட்டிச் செல்லட்டும்— நீ அதை யெண்ணி உன் வாழ்க்கையை என் கட்டளைக்காக தியாகம் செய்து விடு! எந்த அப்பனும் தன் மகனுக்கு இப்படியொரு கடுமையான தண்டனையைத் தரமாட்டான்—ஆனால் நான் தருகிறேன்! காரணமில்லாமல் தரவில்லையடா என் கண்ணே! பழியுணர்ச்சிக்குக் காரணம் முழுதும் உனக்குத் தெரியும்! எந்தப் பாவியும் செய்யத் துணியாத் படுபாதகச்

எதிர்பார்த்த இன்ப ஏடு! எமது புதிய வெளியீடு!!

திடுக்கிடும் சம்பவங்களைப் பின்னணியாகக்கொண்டு
பின்னப்பட்ட ஒப்பற்ற துப்பறியும் நாவல்!

உயிரை வாங்கிய உயில்

(ரா. வேங்கடசாமி) விலை ரூ. 1—25

முத்துவேல் பதிப்பகம்,
77, மதுரை சாலை :: திருச்சி—8.

செயலைச் செய்த குடும்பம் அது! அந்தக் குடும்பம் வாழலாமா? அதற்குப் பெருமை இருக்கலாமா? ஊரார் அந்தக் குடும்பத்தின் ஊழலைத் தெரிந்துகொள்ளாமல இருக்கலாமா? ஆகவே பழிவாங்கு மகனே—பழி வாங்கு! பதிலுக்குப் பதில்! பழிக்குப் பழி! என் கட்டளையை நிறைவேற்றிவிட்டு அதன் பிறகு என் சமாதியை வந்து பார்! அதுவரையில் என சமாதியை நீ தூர இருந்தும் பார்க்கக்கூடாது! எந்தக் காரணத்திற்காகவாவது நீ என் கட்டளையை நிறைவேற்றுமற் போய் விட்டால்...... நீ என் சமாதிமீது காரி உமிழ்ந்ததாக அர்த்தம்! எட்டி உதைத்ததாக அர்த்தம்! என் சமாதிக்கு எருக்கம்பூ மாலை சாத்தியதாக அர்த்தம்!''

—மரணப் படுக்கையில் தந்தை கூறிய அந்த வாசகங்கள், சிங்காரத்தை அணு அணுவாகக் கூறு போட்டுச் சித்ரவதை செய்தன. தந்தையின் கட்டளையை நிறைவேற்றுமற் போய் விட்டால்...?

அய்யோ...தந்தை சொன்ன கடுமையான மொழிகளை நினைக்கவே நெஞ்சு தகிக்கிறதே யெனப் புலம்பி அழுதான்.

''யார் தடுத்தாலும் கவலைப் படாதே!''—இது தந்தையின் வீர உரை!

இப்போது தடுத்து நிற்பதோ தங்கை! அந்தத் தங்கைக்கோ நல்வாழ்வு அளிக்க வேண்டுமென்று தந்தையின் கட்டளை!

இந்த விசித்திரமான சூழ்நிலையை அவன் யாரிடம் சொல்லிப் பரிகாரம் தேட முடியும்? கடற் கரையில், ஒரு அலை கொண்டு வந்து எறிந்த பொருளை, இன்னொரு பெரிய அலை வந்து இழுத்துக்கொண்டு போகும். மீண்டும் ஒரு அலை அதைக் கரைக்குக் கொணர்ந்து, மற்றொரு அலை கடலுக்கே எடுத்தேகி—இப்படி மாறி மாறி ஆட்டி வைப்பது போல், தந்தையின் உத்தரவு அவனை அலைக்கழித்தது. மனப் போராட்டத்தில் மிகுந்த அவஸ்தைப்படுகிறான் என்பதை அறிந்த அறவாழி, மேலும் அவனை வேதனைப் படுத்த விரும்பாமல் மௌனமாகவே உட்கார்ந்திருந்தான்.

''ஏன் தம்பி மௌனமாகி விட்டாய்! ஏதாவது பேசேன்''

என்று கண்களைத் துடைத்துக் கொண்டான் சிங்காரம்.

''இப்போது ஒன்றும் பேச வேண்டாம். நாளைக்கு எனக்குப் பள்ளிக்கூடம் விடுமுறை. எங்கும் போகாமல் பள்ளியிலேயே உட்கார்ந்திருக்கிறேன். தயவு செய்து நீ அங்கு வந்தால.........'' என இழுத்தான் அறவாழி.

''கட்டாயம் வருகிறேன்—அவசியம் வருகிறேன்!'' என எழுந்தான் சிங்காரம்.

எழுந்தவன் மரத்தைப் பார்த்து ''மைனு'' என ஒரு முறை கூறினன். பிறகு அதை விட்டு நகரத் தொடங்கினன்.

அறவாழி, அவன் போவதையே பார்த்துக் கொண்டிருந்து விட்டு ஆழ்ந்த சிந்தனையுடன் திரும்பினன். கோயில் காளைமீது சவாரி செய்து கொண்டு சுருளிமலை வந்தான். அவனைக் கண்டதும் அறவாழிக்கு ஏதோ ஒரு விவரிக்க வொண்ணு மகிழ்ச்சிப் பெருக்கு!

''என்ன தம்பீ சுகமா? வீட்டிலே அப்பா, அம்மா, எல்லோரும் சுகமா?'' எனக் கேட்டான்.

''அக்காள் சுகமா?'' என்று கேட்கவில்லை. அப்பா அம்மாவைப்பற்றிக் கேட்டதெல்லாம் வெறும் உபசாரத்திற்கு! 'அக்கள் சுகமா?' என்றுதான் அவன் கேட்டிருக்க வேண்டும். அதைக் கேட்க அவனுக்கே ஒரு வெட்கம்!

சுருளிமலையோ சாதாரணமாகப் பதில் சொன்னன்; ''அக்காள் உட்பட அனைவரும் சுகம்!'' என்று!

சுருளிமலை, இந்தப் பதிலை வேண்டுமென்றோ — கிண்டலாகவோ சொல்லவில்லை அக்காள் இருப்பதை அறவாழி மறந்து விட்டானே யென்று கருதி அவன் அப்படி விடையளித்தான். ஆனல் அறவாழிக்கு அது 'சுருக்'கென்று தைத்தது. குற்றமுள்ள நெஞ்சல்லவா?

''ஆமாம் — எப்ப பார்த்தாலும் கோயில் காளை—புல்லாங்குழல் — இப்படி ஊர் சுற்றுகிருயே; படிப்பதில் உனக்கு ஆசையே கிடையாதா?''—அறவாழியின் கேள்விக்கு சுருளிமலை பதில் கூறவில்லை. அறவாழி தொடர்ந்தான்.

''நான் சொல்வதைக் கேள். ஒரு நாளைக்குக் கொஞ்ச நேரமாவது படி!''

பதில் இல்லை. சிரித்தான் சுருளிமலை.

''நாளையிலேயிருந்து படிக்கிருயா?''

இதற்கும் மௌனம்தான்!

''படிப்பு என்றல் உனக்குப் பிடிக்காதா?''

சுருளிமலை அறவாழியையே உற்றுப் பார்த்தான்.

''இளமையிற் கல் என்பது முதுமொழி தம்பி! இந்த வயதிலே படித்தால்தான் நல்லது. ஐந்தில் வளையாதது பிறகு ஐம்பதில் வளையாது! எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும். படிப்பு மிகவும் அவசியம்! மிகவும் அவசியம்! சொல்வது புரிகிறதா தம்பி!''

சுருளிமலை இன்னும் உன்னிப்பாக அறவாழியைக் கவனித்தான். பதில் கூறவில்லை.

''என்ன விழிக்கிருய்? நான் சொல்வது ஏதோ பைத்தியக்காரன் உளறல்போல இருக்கிறதா? அப்படி யெல்லாம் நினைக்காதே. படித்தால்தான் உலக விஷயம் தெரியும். அறிவு பிரகாசமடையும். அலட்சியமாய் நினைக்காதே தம்பி!''

இப்போது சுருளிமலை, கலகலவென நகைத்தான். அறவாழிக்கு ஒன்றும் புரியவில்லை. திகைத்தான். பின், சுருளிமலை தன் மடியிலிருந்து ஒரு காகிதச் சுருளை யெடுத்து அறவாழியிடம் கொடுத்தான். அறவாழி, அதை ஆவலாக வாங்கிப் பிரித்துப் பார்த்தான். அவனை உடனடியாக அந்த ஊரைவிட்டு வேறு ஊர் பள்ளிக்கூடத்திற்கு மாற்ற வேண்டுமென்று ஊர் மக்கள் கையெழுத்திட்ட மகஜர் அது!

மகஜரைப் பார்த்ததும் அறவாழி அவ்வளவு தடுக்கிடவில்லை. அவன் எதிர்பார்த்ததுதான். அதில் எழுதப்பட்டிருந்த குற்றச்சாட்டுக்களும் அவனைக் கலக்கிடவில்லை. ஐந்தாறு தாள்கள் இணைக்கப்பட்டிருந்த அந்த மகஜரில் முதல் தாளில் அறவாழியை மாற்றிட வேண்டும் என்பதற்கான காரணங்கள் எழுதப்பட்டிருந்தன. மரியாதையில்லாதவன்; ஊராரிடம் ஆணவமாக நடந்து கொள்கிறன்; எல்லாம் தெரிந்தவனைப் போல் மற்றவர்களுக்குப் புத்தி சொல்கிறன்; ஒழுங்காகப் பாடம் நடத்துவதில்லை; பிள்ளைகளை உருப்பட வைக்க மாட்டான்; வீண் கதை பேசுவதே பள்ளிக்கூடத்தில் வேலை —இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளை முதல் பக்கம் முழுதும் நிரப்பிவிட்டு, அடுத்த தாள்களில் ஊர் மக்கள் தங்கள் கையெழுத்துக்களை நிரப்பியிருந்தார்கள்.

பஞ்சாயத்தார் பரமசிவத்தின் கையெழுத்தே முதல் கையெழுத்து! யார் யார் கையொப்பமிட்டிருக்கிறர்கள் என்று வரிசையாகப் பார்த்து வந்த அறவாழி, இதயத்தில் சாமட்டியடி விழுந்ததுபோல் திடுக்கிட்டான்—வேதனைப்பட்டான்.

காரணம்; கையெழுத்து வரிசையின் கடைசியில் பொன்னியின் கையெழுத்தும் இருந்தது!

தொடரும்

சென்னையில் இலங்கைத் தமிழர் உரிமை நாள்

சென்னை மாவட்ட தி. மு. க. சார்பில், நேப்பியர் பார்க்கில், மாவட்டத் துணைச் செயலாளர் தோழர் கோ. செங்குட்டுவன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன், இராம. அரங்கண்ணல், இலட்சிய நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன், நடிகமணி டி. வி. நாராயணசாமி, க. அறிவழகன், இலங்கை வழக்கறிஞர் சி. ச. தம்பி ஆகியவர்களும், படத்தில் காணப்படும் வழக்கறிஞர் வி. பி. இராமன், ஆசிரியர் மு. க.—ஆகியோரும் பேசினர்.

அறிவியக்கவாதிகள்

சிந்தனைச் சிற்பி **சி. பி. சிற்றரசு**

(திருவாரூர் மாநாட்டுச் சொற்பொழிவின் சுருக்கம்)

உலகைத் திருத்திய உத்தமர்கள் பட்டியலிலே சேர்ந்தவர்கள் அனைவரையுமே அறிவியக்க வாதிகள் என்றால் மிகையாகாது.

கரடு முரடாக நடந்து கொண்டிருந்த அரசியலை ஏகாதிபத்தியவர்கள்—சிலமில்லாமல் திரிந்து கொண்டிருந்த மக்களை சீர்திருத்தி ஒரு செம்மையான சமூகமாக்கியவர்கள்—மன்னனையும் மணிமுடியையும் கீழே தள்ளி மக்களாட்சியை உண்டாக்கிய மனிதாபிமானிகள் — உலக முன்னேற்றத்தின் அறிகுறியே கொஞ்சங்கூடத் தெரியாமல், கள்ளர் மனம்போல் இருண்டிருந்த வையத்தை சுடர் மயமாக்கியவர்கள்—சிலுவைதான் பெரிதென்றவரையும், செங்கோல்தான் பெரிதென்றவரையும் அதட்டி நிறுத்தி, இதோ என் கையிலிருக்கும் பேனாதான் பெரிதென்ற புரட்சி எழுத்தாளர்கள்—'பணத்தால் பாவம் நீங்குமா ஐயன் டெட்சால் அவர்களே? போதும் உங்கள் பாவ மன்னிப்புச் சீட்டின் விற்பனை! கடையைக் கட்டும்!'' என்று அறப் போருக் கழைத்த மார்டின் லூதர் ஆகிய அனைவருமே அறிவியக்கவாதிகளே!

அறிவியக்கவாதிகள் என்று பேசுவதற்கு முன்னால், அறிவென்றால் என்ன என்பதைப் பற்றிக் கொஞ்சம் 'தொலஸ்கோப்' வேலையைத் தொடங்குவோம்!

ஏனெனில், அறிவைப்பற்றி ஆண்மார்த்திக வாதிகளுக்கும் அறிவியக்கவாதிகளுக்கும் ஏற்பட்ட போர் இன்னும் நின்றபாடில்லை. தொழிலாதாரத்தை விட, பொருளாதாரத்தைவிட, சுகாதாரத்தைவிட, இந்த அறிவாதாரத்தைப் பெறுவது கொஞ்சம் கடினமானதும் சிக்கலானதுமாகும்.

ஆண்மார்த்திகவாதிகளுக்கும் நமக்குமுள்ள வேற்றுமை என்ன? அடித்தால் பாவம் என்கிறார்கள்; அடித்தால் நோகும் என்கிறோம் நாம்! நோவது முந்தியா—அல்லது பாவம் என்று சொல்வது முந்தி இருக்குமா என்பதை நடுநிலையிலிருந்து நாம்தான் சிந்திக்க வேண்டும். அடித்தவுடன் முதலில் நோகும். பிறகு பாவம் என்று சொல்லி வைத்தால் மீண்டும் அடி விழாமல் இருக்கும். இதுதான் காரணம்.

மேலும், அறிவு யார் தந்தது என்ற அடிப்படையிலேயே அவர்களுக்கும் நமக்கும் அதிக வேற்றுமையுண்டு. அறிவை ஆண்டவன் கொடுத்தார் என்கிறார்கள் அவர்கள். அறிவிக்கப்பட்டதால் அறிவு என்று வந்தது என்கிறோம், நாம். எது உண்மை? இதையும் நாம் நடுநிலைமையிலிருந்து சிந்திக்க வேண்டும்.

அவர்கள் கூற்றுப்படி அறிவு ஆண்டவன் கொடுத்திருந்தால் குழந்தைகள் பிறந்தவுடனே அவைகளுக்கு அறிவு வந்திருக்க வேண்டும். அப்படி வந்திருந்தால் நெருப்பு சுடும்; தேள் கொட்டும்; பாம்பு கடிக்கும்—என்று அவைகளுக்குத் தெரிந்திருக்க வேண்டும். தெரிகின்றதா? இல்லை. 'பாப்பா! நெருப்பு சுடும்; தொடாதே!' என்று அறிவித்தோம். 'தண்ணீரில் இறங்காதே; மூழ்கி விடுவாய்' என்று அறிவித்தோம். 'தேள் கொட்டும்; அருகில் போகாதே' என்று அறிவித்தோம். 'பாம்பு கடிக்கும் ஓடி வந்து விடு' என்று ஒவ்வொன்றாக குழந்தைகளுக்கு அறிவித்தோம். ஆகையால்தான் அறிவித்ததின் விளைவாக அது அறிவு என்று பெயர் பெற்றது என்ற கூற்றை பல பகுத்தறிவு மேடைகளிலே வலியுறுத்தினோம். இந்தக் கூற்றுக்கு அவர்கள் இதுவரை நேரடியான பதில் சொல்லவே இல்லை. அதற்கு மாறாக நம்மை ஒரேயடியாக நாத்திகர்கள் என்று சொல்லி விட்டார்கள். ஏன்? நமது அறிவுக்குப் பொருந்தாத ஒவ்வொன்றையும் நாம் ஆராய்ந்தோம்.

உதாரணத்திற்கு இரண்டொன்றைச் சொல்வோம். திருஞானசம்மந்தன் விட்ட ஓலை நீரை எதிர்த்துச் சென்றது என்றார்கள் சைவப் 'பெரு மக்கள்! நாம் சொன்னோம், மீனைத் தவிர வேறு எதுவும் நீரை எதிர்த்துச் செல்லாது; ஆகையால் திருஞான சம்மந்தன் மீன் வாலில் அந்த ஓலையைக் கட்டி விட்டிருப்பான் என்று! இதைக் கேட்டவுடன் அவர்களுக்குக் கோபம் வந்ததே தவிர, நேரான பதில் வரவில்லை. ஏனெனில் அவர்கள் கூறுவதை நம்ப வேண்டுமானால் பக்தியின் பேராலேதான் நம்ப வேண்டும். நாம் சொன்னதை நம்ப வேண்டுமானால் பக்தி என்று ஒன்றிருக்கத் தேவையில்லை — அறிவு இருந்தாலே போதும்.

அறிவுக்கு எல்லை வகுப்பதிலும் அப்படித்தான். அவர்கள் அறிவுக்கப்பால் ஆண்டவன்; ஆண்டவனுக்கப்பால் அவன் அருள்; அந்த அருள்படியே மனிதர்கள் வாழ்க்கை—என்று சொல்கிறார்கள். அதே மதவாதிதாம் முன்னே சொன்னதற்கு முரணாக வாதாடுகிறார்கள்!

மனிதன் ஏன் ஏழையாய்வாடுகிறான்; ஏன் நோயால் வதைக்கிறான் — என்று கேட்போமானால், ஆண்டவன் அவனிடம் கொண்ட அன்பு அவ்வளவுதான் என்று ஒருதரம் சொல்லி, மறுபடியும், அவன் பூர்வ ஜென்மத்தில் செய்த கருமவினை என்கிறார்கள். இந்த இரண்டு வாதங்களும் எவ்வளவு முரணானது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆனால் நாம் சொல்வது, அவரவர்கள் அறிவுத்திறத்தாலே உயருகிறார்கள் என்பது! இதற்கு உலகப் பொதுமறை தந்த பொய்யாப் பெருந்தகை வள்ளுவன் வகுத்த குறளின் ஓர் அருமையான குறள் இருக்கிறது அது, 'வெள்ளத்தனைய மலர் நீட்டம் மாந்தர் தம் உள்ளத்தனைய உயர்வு, என்பது. தடாகத்தில் தண்ணீர் உயர உயர எப்படி தாமரை மலர் உயருமோ, அதுபோல மாந்தர்கள் அறிவு உயர உயர வாழ்க்கையும் உயரும் என்கிறார்.

ஆகவேதான் நாம் அறிவியக்கவாதிகளாக இருக்கிறோம். நாம் அறிவின் வளர்ச்சிக்கு இன்னும் எல்லை வகுக்கக் கூடியவர்களாக இல்லை. உலகம் நமது கோட்பாடுகளை 'ஆம்' என்று சொல்லிக் கொண்டே இருக்கிறது. சந்திர மண்டலத்துக்குப் போகலாம் என்றார் ஒருவர். சந்திரனையே செய்து விட்டுவிடலாம் என்று சொல்லி வான வெளியில் உலவ விட்டார் வேறொருவர். அறிவு இன்னும் எவ்வளவு வேகமாக முன்னேறுமோ பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்! ஒரு குறிப்பிட்ட காலம் வரையிலும் ஏழு அதிசயங்கள்; ஏழு அதிசயங்கள் என்று சொல்லிக் கொண்டே இருந்தார்கள். இப்போது அப்படி சொல்வதில்லை. ஏன்? தோன்றியிருக்கும் அதிசயங்கள் எண்ணத் தொலையாததாயிருக்கின்றன.

இங்கே அமைந்திருக்கிற இந்த மாநாட்டுக் கொட்டகை ஒரு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தால் கண்ணைப் பறிக்கும் இந்த மின்சார விளக்குகளைக் கண்டிருக்க முடியாது. சூரியன் நிழலைப் பார்த்து நேரம் தெரிந்து கொள்ளும் நிலை மாறி ஒவ்வொருவர் கையிலும், வீட்டிலும், அலுவலகங்களிலும் கடிகாரங்களைக் காண்கிறோம்! எங்கிருந்து வேண்டுமானாலும் நேராகப் பேசலாம்; கேட்கலாம்! காலை சென்னையில் காபி; பகல் உணவு டில்லியில் —இப்படிப் பலப் பல அதிசயங்கள்! இவ்வளவும் அறிவின் செயலல்லவா? சிங்கத்தால் கொல்லப்படுவது விதிதானே என்றான் ஒருவன்; அதே சிங்கத்தை அடக்கியாள்வது மனிதனின் மதியல்லவா — என்கிறான் மற்றொருவன். ஆகவே முடிவு பெறாத போர்—முடிக்க முடியாத போர் அறிவுப் போர்! வளரும் போர் அறிவுப் போர்! வாழ்க அந்த அறிவுப் போர் என வாழ்த்துகிறோம்.

கோவை மாவட்ட

தி. மு. கழக 3-வது மாநாடு

1958 ஜூலை 5 6. (சனி, ஞாயிறு) நாட்களில்

கோபிச்செட்டிப்பாளையம்

வி. பி. இராசு நகரில் அமைந்துள்ள அர்ச்சுனன் பந்தல் - நாகம்மையார் அரங்கில் நடைபெறும்.

தலைவர் :	திறப்பாளர்:
ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம். எல். ஏ.	ஆர். தருமலிங்கம் எம். பி.

அறிஞர் அண்ணா, பொதுச் செயலாளர் **நெடுஞ்செழியன்**

மற்றும் கழக முன்னணி வீரர்கள் கலந்து கொள்வார்கள்.

முதல் நாள் இரவு **"உதய சூரியன்"** நாடகம் நடைபெறும்

மகளிரும் அரசியலும்

டாக்டர் சத்தியவாணிமுத்து, எம்.எல்.ஏ.

[திருவாரூர் மாநாட்டுச் சொற்பொழிவின் சுருக்கம்]

சீரும் சிறப்பும் காண நடைபெறும் இம்மாநாட்டில் மகளிர்க்கென ஒரு பகுதியை ஒதுக்கி, அதில் நமது தோழியர்கள் பேச வாய்ப்பு தந்தமைக்காக நான் முதலில் நன்றி செலுத்தத் தவறினால் கடமையினின்று தவறியவளாவேன். இந்த தனிப் பெருமையை மகளிர்க்கு அளித்த பெருமை தோழர் கருணாநிதி அவர்களைச் சாரும். அவரை நான் பாராட்டுகிறேன். அடுத்து நடைபெறவிருக்கும் மாநாடுகளிலும் இது போலவே மகளிர்க்கென தனிப் பகுதி ஒன்றை ஒதுக்கித் தரும்படி பொதுச் செயலாளர் அவர்களையும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

எனக்கு முன்னால் சொற்பொழிவாற்றிய நமது தோழியர்கள் — கொடுக்கப்பட்ட பொருள் குறித்து மிக அழகாக, நல்ல தெளிவுடன், விளக்கமாகப் பேசி இருக்கிறார்கள். இதிலிருந்து திராவிட முன்னேற்றக் கழகத்தில் பங்கு பெறும் பெண்கள், நல்ல அரசியல் விழிப்புணர்ச்சி பெற்றவர்களாகவும், பொருளின் தன்மை புணர்ந்து ஆணித்தரமான வாதங்களை அடுக்கக் காட்டக் கூடிய ஆற்றல் பெற்றவர்களாகவும் உள்ளனர் என்பதை நாடு உணர்ந்திருக்கிறது. ஆனால் இத்தகைய விழிப்புணர்ச்சியும், விஷயத் தெளிவும்பெற்றமகளிர் மாற்றுக் கட்சிகளில் மருந்துக்குக்கூட கிடைக்கமாட்டார்கள்.

என்றாலும் ஏதோ நாங்களும் பேசுகிறோம் என்ற முறையில் நாட்டை ஆளும் காங்கிரஸ் கட்சியில் உள்ள அம்மையார்களின் பேச்சுகளைக் கேட்டால் பரிதாபமாக இருக்கும். ஒரு பட்டதாரி அம்மையார்—சட்ட மன்ற உறுப்பினர் — சட்ட மன்றத்தில் பேசும் முறையறியாது பேசித் தன் "திறமை"யை வெளிப்படுத்தினார்கள். மற்றொரு பெண் உறுப்பினர்— நான் சென்னை ராஜ்யத்திற்குத் 'தமிழ்நாடு' என்று பெயரிடாமல்போனால் கண்ணகியாக மாறி—போராடி வெற்றி பெறுவேனென்று வீராவேசமாய்ப் பேசினார்கள். என்றாலும் 'தமிழ்நாடு' என்று பெயரிடவும் காணோம்—அம்மையாரும் கண்ணகியாக மாறியதாகவும் தெரியவில்லை!

அதோடு நின்றார்களா? இனி நான் சினிமாவை ஒழிக்கப் போகிறேன் என்ற முறையில் அடுத்தப் போராட்டக் கணையைத் தொடுத்தார்கள். அந்தோ பரிதாபம்! ஜனநாயக முறையில் ஆட்சி புரிகிறோம் என்று கூறிக்கொள்ளும் காங்கிரஸ் கட்சியின் சனம் பெண் உறுப்பினர்—காலத்தை மறந்து— இது "ராஜா—ராணி" காலமென்ற நினைப்பில் — நான் சினிமாவை ஒழித்து விடுவேனென்று பேசி வாய் மூடுவதற்குள் — அம்மையார் சார்ந்திருக்கும் காங்கிரஸ் அரசாங்கம் நல்ல சினிமாக்களுக்கு பரிசு கொடுத்து பாராட்டிய செய்தியைக் கண்டதும் அவர்களது முகத்தில் அசடு வழிகிறது.

நாம் நாட்டின் கேட்டை விளக்க — மக்களுக்குத் தேவையான சத்தான கருத்துக்களை நாடக மூலம் மக்களுக்கு அளித்து வருகிறோம். நம்மைப் பார்த்து 'நாடகமாடிகள்" என்று நாள் தவறினாலும், கிடைக்கின்ற மேடை தவறாது முழங்கும் அம்மையார் —சட்டசபை விடுதி விழாவின் போது, சினிமா ஸ்டுடியோவை நாடி ஓடி "மேக்கப்" செய்து கொண்டு வந்தார்கள்.

இவர்கள்தான் இப்படி என்றால் — மற்றொரு அம்மையார்—பட்டம் பெற்ற வக்கீல்—சட்டசபை விவகாரங்களில் கரைகண்டவர் போல காட்டிக் கொண்டு கர்ஜனை புரிகின்றவர் — கட்சிக்குள் நடக்கும் நடப்புகளைக்கூட சரிவர அறிந்து கொண்டு பேசாமல் உண்மைக்கு மாறாகப் பேசி பல தடவை அவமானப்பட்ட நிகழ்ச்சிகள் ஏராளம்!

இப்படி காங்கிரஸ்காரர்களின் கருத்துக் குழப்பத்தையும்—வெத்துவேட்டு வெளிவேஷத்தையும் எடுத்துச் சொல்லிக் கொண்டே போகலாம்—அது நீளும்.

இவையெல்லாம குறிப்பிடுவதற்குக் காரணம் — கருத்துக் குருடர்களான அவர்கள் எங்கே; விஷயமறிந்த — விவேகமுள்ள நமது மகளிர் எங்கே என்பதை நாட்டு மக்களுக்கு உணர்த்த வேண்டும் என்பதால்தான்!

வீர மகளிர் பலரைக் கொண்டுள்ள நாட்டு விடுதலைப் பணி வளரட்டும்! அதை நீங்கள் ஊக்குவிக்கும் வண்ணம் உங்கள் வீட்டிலுள்ள பெண்களும் சேர உதவுவீர்களென எண்ணுகிறேன். ஃ

காலம் கடந்த ‘கண்டுபிடிப்பு’!

ஆயிரம் முறை அடித்து அடித்துச் சொன்னாலும் உண்மை பொய்யாகிவிடாது; பொய்யும் உண்மையாகிவிட முடியாது!

திராவிட முன்னேற்றக் கழகம் ஆதாரங்களோடும் — மக்களின் ஆதரவோடும் ‘வடக்கு வாழ்கிறது; தெற்கு தேய்கிறது!’ என்று குறிப்பிட்ட போதெல்லாம் அதை கற்பனை வாதம்; வெறும் சொல்லலங்காரம் என்று கூறிவந்தனர், நாம் கூறுவதை எதிர்க்க மட்டுமே தெரிந்தவர்கள்.

ஆனால், இப்போதோ நாம் எதிர்பாராத இடங்களிலிருந்தெல்லாம். டெல்லி மூல பீடத்தின் ஓரவஞ்சனை போக்கு குறித்து கண்டனங்கள் கிளம்பிக் கொண்டிருக்கின்றன:

“தமிழ் நாட்டில் தொழில் வளர்ச்சி மிகக் குறைவாக இருக்கிறது! 60 கோடி ரூபாய் மூலதனத்தில இங்கே நெய்வேலி ஒன்று மட்டுமேதான் சொல்லிக் கொள்ளக்கூடிய அளவில் இருக்கிறது! ஆனால் வடக்கேயோ...5000 கோடி ரூபாயில் அநேக தொழில்கள் வளர்க்கப்படுகின்றன இந்த நிலை மாறுவதற்கு தெற்கே கிளர்ச்சி நடந்தால் தவிர, மத்திய சர்க்கார் வழிக்கு வருமென்று நம்பமுடியாது!”

—இப்படி விருதுநகர் வர்த்தக சபை 14—வது ஆண்டு விழாவில் தலைமை வகித்த தொழிலதிபர் திரு எஸ். அனந்தராமகிருஷ்ணன் பேசினராம்.

மத்திய சர்க்காரை வழிக்குக் கொணர கிளர்ச்சி தேவை என்கிறார் அனந்தராமகிருஷ்ணன்!

கிளர்ச்சி தேவை இல்லை; கண்டித்துக் கேட்கும் துணிவாவது வேண்டாமா இந்த சென்னை அரசாங்கத்துக்கு?

இப்படிக்கேட்டால், சென்னை அரசாங்கம் மட்டும் தொழில் துறை வளர்ச்சியில் கவனம் செலுத்தாமலா இருக்கிறது? அது துவங்கியிருக்கும் தொழிற்சாலைகளைக் காணீர் — என்று பட்டியலைப் படிக்கிறார்கள்:

பாதரட்சை தொழிற்சாலை!

‘சுடர்’ தீப்பெட்டித் தொழிற்சாலை!

அப்பளத் தொழிற்சாலை!

இந்தக் கேலிக்குரிய பட்டியலைப் படித்து தலைகுனியத்தான் வேண்டியிருக்கிறது!

சென்னை மாகாணத்திற்கு ஒரு பெருமை உண்டு நீண்ட காலமாக!

சுரண்டலுக்கு வழி கொடுத்து, சுந்தர பூமியைச் சுடுகாடாக்கிக் கொள்ளும் தாராளப் பண்பையோ— வாழ்ந்த பெருமை மறந்து, வடக்கு நோக்கிக் காவடி தூக்கும் அடிமை மனப்பான்மையையோ அல்ல இங்கே குறிப்பிடுவது!

“குமாஸ்தாக்களைத் தயார் பண்ணுவது சென்னை மாகாணம்தான்” — என்று வேடிக்கையாகக் குறிப்பிடுவார்கள்!

காரணம் என்ன? இங்கே தொழிற்சாலைகள் இல்லை; ஆகவே தொழிலாளிகள் குறைவு!

வடக்கே இருக்கின்ற மாகாணங்களில் எல்லாம் ஆலைகள் அதிகம்; அதற்கான வழிவகைகள் செய்ய ஆசையும் ஆதிக்க வெறிபிடித்தவர்களும் ஏராளம்! அங்கே பள்ளியிலிருந்தோ — கல்லூரியிலிருந்தோ வெளிவருகின்ற ஒருவன் நிமிர்ந்து பார்க்கிறான், வானுயர எழுந்து நிற்கும் புகை போக்கிகளை நோக்கி!

ஆனால் இங்கேயோ... ‘குனிந்த தலை குமாஸ்தாக்கள்’ பெருகிடவும் — பின் ஊதியத்திற்குப் போரிடவும்தான் வழி இருக்கிறது!

இந்த நிலை என்றுதான் மாறுமோ? ஃ

சென்ற 18–6–58 அன்று, நமது இயக்கத் தோழரும், கரூர் பி. பெருமாள் அவர்களது புதல்வருமான தோழர் பெ. இராசமாணிக்கம் அவர்களுக்கும், செல்வி வசந்தா அவர்களுக்கும் வாழ்க்கை ஒப்பந்த விழா சிறப்புற நடைபெற்றது. விழாவிற்கு அறிஞர் அண்ணா அவர்கள் தலைமை வகித்தார்கள். தி. மு. க. தலைவர்கள் பலர் வாழ்த்துரை வழங்கினார்கள். நாமும் மணமக்களை வாழ்த்துகிறோம்.

தலையங்கம்...

[3–ம் பக்கத் தொடர்ச்சி]

இந்தி, உருது, இந்துஸ்தானி பேசுகிறவர் மொத்தம் 4,55,745 பேர்! தமிழர் மட்டும் இந்த இருபத்தேழு நாடுகளில் மாத்திரம் 4,81,628 பேர்!

இலங்கையிலோ, தமிழர்களேதான் இருபத்தைந்து லட்சம் பேர் தங்கள் மொழி காக்கவும், உரிமை காக்கவும் இன்று உயிரோடு போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

தாய், திண்ணையிலே நின்று கொண்டிருக்கிறாள்; தெருவிலே குழந்தையின் குரல் வளையைக் கொலைகாரத் திருடன் ஒருவன் அமுக்கிக் கொண்டிருக்கிறான்; கணவனோ கூடத்தில் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருக்கிறான்; தாய், கணவனை எழுப்ப வழியில்லை — குழந்தையை மீட்க ஓடவழியில்லை—என்று கேள்விப்பட்டால் அவள் தாயாக இருக்க முடியுமா? பேயாகத்தான் இருக்க வேண்டும்!

கொஞ்சம் எண்ணிப் பாருங்கள் — கதையில் வரும் கணவனை நேருவும், குழந்தையாக இலங்கைத் தமிழரும், தாயாக நமது காமராசரும்தானே காட்சி தருகிறார்கள்!

இந்த நிலையில், நாம் நமது கடமையைச் செய்ய முன் வந்து நிற்கிறோம். தூங்கும் துரைத்தனத்தாரை எழுப்ப முயலுகிறோம். ‘தூங்கினால் தானே எழுப்புவதற்கு? நாங்கள்தான் விழித்துக் கொண்டே கண்ணை மூடியிருக்கிறோமே’ என அவர்கள் கூறிவிடுவார்களேயானால் அதற்கு மேல் நடக்க வேண்டியவைகளுக்குத் தி. மு. கழகம் இங்குள்ள திராவிடப் பெருங்குடி மக்களின் ஒத்துழைப்பைக் கேட்பதைத் தவிர வேறென்ன செய்யமுடியும்?

சூழல்விளக்கு...

[2—ம் பக்கத் தொடர்ச்சி]

நடைபெற்றதைக் கண்டு உலகத் தொழிலாளி வர்க்கமே குமுறிக் கொண்டிருக்கிறது!

விரட்டப் படுவதற்குத்தான் சுட வேண்டும்—இப்படித்தான் அரசாங்க ஏடுகள் பறைசாற்றுகின்றன!

ஆனால் இவை எழுத்து வடிவோடு மட்டுமே நின்று, ஆட்சி பீடத்திலிருப்போரின் சுய வடிவைக் காட்டுகின்றன, இப்படிப்பட்ட படுகொலைகள்! கொல்லத்தான் சுடுகிறோம் என்றும் சொல்லாமல் சொல்லுகிறார்கள்!

இந்தத் துப்பாக்கிப் பிரயோக விசாரணை வழக்கு மன்றத்திலே இருக்கிற நேரத்தில்தான் புதியதொரு விளக்கம் எழுகிறது அதற்கு!

விரட்டுவதற்காகவும் சுடவில்லை!—

கொல்லுவதற்காகவும் சுடவில்லை—

ஆனால் காப்பாற்றுவதற்காகவேதான் சுட்டார்கள்!

இப்படி புதிய வியாக்யானம் தந்திருப்பவர் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஆவார்!

“அன்று துறைமுகத்தில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்திராவிட்டால், இன்னும் அநேக உயிர்களுக்குச் சேதம் ஏற்பட்டிருக்கும்”

—என்கிறார் அவர்.

அமைதியை நிலை நாட்டத்தான் சுட்டார்களாம் — பல உயிர்களுக்குச் சேதம் ஏற்படாமல இருக்கத்தான் ஏழு உயிர்களைப் பதைக்கப் பதைக்கக் கொன்றார்களாம்! அநேகரைப் படுக்கையில் கிடத்தினார்களாம்!

12 வயதுப் பாலகன்-உலகம் எப்படிப்பட்டது என்பதை உணர்ந்துகொள்ள முடியாத பருவத்தினன்! காங்கிரஸ் ஆட்சி எவ்வளவு காட்டுமிராண்டித்தனம் கொண்டது— என்றுகூடத் தெரியாது அவனுக்கு! அவன் என்ன செய்துவிட முடியும், கோடிக் கணக்கிலே குண்டுகளையும், இலட்சக் கணக்கிலே சிப்பாய்களையும் கொண்டிருக்கிற இந்த சர்க்காரை? அவனால் என்ன நாசம் வந்துவிடும் என்று அவர்கள் கருதினார்கள்? அவனை நோக்கி துப்பாக்கி ரவைகளைப் பொழிந்திருக்கிறார்கள்! ‘மூளை இருப்பதாலதானே முட்டாளே, நீ சிந்திக்க முடியும்! நாளை இந்த ஆட்சியின் கொடுமையைப் பற்றி யோசிக்க முடியும்! அதை அபகரித்து விடுகிறேன் பார்!’ என்று சொல்லி, அந்தத் தங்கத்தின் தலையை உடைத்து, மூளையைச் சிதற அடித்துவிட்டார்கள்! தலையில்லாத முண்டமாக அவனது பிரேதம் ஊர்வலம் சென்றிருக்கிறது!

இது நியாயமாம்—ராஜாராம் சொல்லுகிறார்!

கடையில் அமர்ந்து தன் பணியைச் செய்து கொண்டிருக்கிறார், ஒரு தையற்காரர்! அவர் கையிலே இருந்த கத்திரிக்கோல் போலீசாரை நோக்கித் திரும்பும் என்று பயந்தார்களோ —அல்லது நாட்டு மக்களை நாசப் படுத்தும் என்று கருதினார்களோ தெரியவில்லை — ராஜாராம் கூற்றுப்படி அவர் பயங்கரவாதியாகத் தென்பட்டுவிட்டார் போலும்! ‘குடல் இருப்பதால்தானே உனக்குப் பசி எடுக்கிறது! பசி எடுக்கும் நேரத்தில்தானே கோலோச்சும் கொடியவர்களை எண்ணிக் குமுற முடியும்!’ என்று சொல்லி, அவரது வயிற்றை நோக்கிப் பாய்ச்சியிருக்கிறார்கள் துப்பாக்கிக் குண்டுகளை!

இதுவும் நியாயமாம்—ராஜாராம் சொல்லுகிறார்.

தொழிலாளர்களுடைய வீடுகளில் புகுந்து பெண்களின் மண்டையை உடைத்து வெறியாட்டம் போட்டிருக்கிறது போலீஸ்! அந்தப் பெண்மணிகளால் என்ன ஆபத்து வரும் என்று கணக்கிட்டார்கள்?

அதுவும் நியாயம்தானாம்— பல உயிர்கள் சாகாமல் இருப்பதற்கு ஏழு உயிர்களைப் பலி கொண்டார்களாம்—ராஜாராம் சொல்கிறார்!

அவரது நெஞ்சிலே ஈவு இரக்கமென்பதே இல்லையா—என்று கேட்கிறீர்களா? என்ன செய்வது; அவர் அங்கம் வகிக்கும் அமைச்சிலேயே இப்போது அந்த மனிதாபிமானம் மருந்துக்குக் கூடக் கிடைப்பதில்லையே! ஃ

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி ‘முரசொலி’ அச்சகம், 4—128, மவுண்ட் ரோடு, சென்னை—6, தமிழ்நாடு